بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

இக்காலத்தில் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனை மற்றும் அழகிய நடைமுறையின் உண்மையான முன்மாதிரியாகும். இந்த அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்மாதிரியும் கூட வழிகாட்டும் விளக்கமாகும். நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். நமது சான்றோர்களான பெரியோர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றிய அறிவிப்புகளைக் கொண்டு சேர்த்தார்கள். அந்த அறிவிப்புகள் வருங்கால சந்ததிகளுக்கு உண்மையான போதனையாகவும், சில மார்க்க விவகாரங்களுக்கு தீர்வாகவும் அமையக் கூடியவையாகும்.

*அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்*

*(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)*

*அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 18.9.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்*

தஷஹ்ஹுத், தஅவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமை என்ற முறையில் மார்க்கத்தைப் புதுப்பிப்பதற்காக அனுப்பினான். அன்னார் நமக்கு மார்க்கத்தின் அடிப்படையையும், அசலையும், அதன் உண்மையான போதனையையும் அழகுபடுத்திக் காண்பித்தார்கள். மார்க்கத்தில் புதுமைகள், தவறான நடைமுறைகள் ஆகியவற்றை அகற்றுவதற்கு போதனை செய்தார்கள். இக்காலத்தில் அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனை மற்றும் அழகிய நடைமுறையின் உண்மையான முன்மாதிரியாகும். இந்த அடிப்படையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்மாதிரியும் கூட வழிகாட்டும் விளக்கமாகும். நாம் நற்பேறு பெற்றவர்கள் ஆவோம். நமது சான்றோர்களான பெரியோர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றிய அறிவிப்புகளைக் கொண்டு சேர்த்தார்கள். பழைய அஹ்மதிகளில் பலர் தமது சான்றோர்களின் சில சம்பவங்களை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி கேட்டிருப்பார்கள். அவர்கள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பார்த்துள்ளார்கள். அன்னாரின் அருகாமையிலிருந்து அருள் பெற்றார்கள்.

எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்புகளின் முக்கியத்துவம் குறித்து ஓரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விவரித்துள்ளார்கள். நமது கோணத்திற்கேற்ப சில விஷயங்கள் மிகச் சிறியதாக இருந்தாலும், வெளிப்படையில் தோன்றினாலும் பெரும்பாலான போதனைகளையும் இஸ்லாத்தின் அடிப்படை போதனைகளையும் அதிலிருந்து அன்னார் எடுத்துள்ளார்கள். அதனை நான் இந்த நேரத்தில் எடுத்து வைக்கிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய காலத்தில் பெரும்பாலான சஹாபா இருந்தார்கள். எனவே, அந்நாட்களில் அன்னார் சஹாபாக்களுக்கும் கூட கவனமூட்டினார்கள். அல்லது அவர்களின் உறவினர்களுக்கு அத்தகைய அறிவிப்புகளை தொகுக்குமாறு கவனமூட்டினார்கள் அந்த அறிவிப்புகள் வருங்கால சந்ததிகளுக்கு உண்மையான போதனையாகவும், சில மார்க்க விவகாரங்களுக்கு தீர்வாகவும் அமையக் கூடியவையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடமிருந்து சின்னச்சின்ன விஷயத்தைக் கூட தெரிந்திருந்து அதனை அவர் மறைத்து வைத்தால், மற்றவருக்கு அதனை சொல்லாமல் இருந்தால் அது ஒரு சமூக நம்பிக்கை துரோகம் ஆகும். சில விஷயங்கள் மிகச்சிறியவையாக இருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. ஆனால் பல சின்னச்சின்ன விஷயங்கள் விளைகளைப் பொறுத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்காக ஒருமுறை சுரைக்காய் சமைக்கப்பட்டது. அன்னார் சமைத்த சுரைக்காய் துண்டுகளை குழம்பிலிருந்து எடுத்து மிகவும் ரசணையுடன் உண்டார்கள். எந்த அளவுக்கு என்றால் குழம்பில் சுரைக்காயின் ஒரு துண்டு கூட எஞ்சியிருக்கவில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சுரைக்காய் மிகவும் உயர்ந்த பொருளாகும். வெளிப்படையாகப் பார்க்கும்போது இரு ஒரு சிறிய செய்தியாகும். பல அஹ்மதிகள் கூட இதனைக் கேட்டு விட்டு சுரைக்காயைப் பற்றி குறிப்பிட வேண்டிய தேவை என்ன என்று கூறலாம். இக்காலத்தில் பெரும் படித்தவர்களுக்கு கூட இதுபோன்ற விஷயங்களில் அதிக கவனம் ஏற்படுவதில்லை. இது ஒரு சாதாரண செய்தி என்று நினைப்பார்கள். ஆனால், ஒரு சிறிய செய்தியினால் இஸ்லாத்திற்கு எவ்வளவு பெரும் பயன் ஏற்பட்டுள்ளது. இன்று நாம் முஸ்லிம்களிடம் நடைமுறையில் உள்ள குழப்பங்களை மதிப்பிடவே முடியாது. ஆனால் இஸ்லாத்திற்கு ஒரு காலம் வந்தது. இந்தியாவில் இந்திய பண்பாட்டின் தாக்கம் முஸ்லிம்கள் மீது ஏற்பட்டது. அந்தத் தாக்கத்தின் விளைவாக நல்லவர்கள் மட்டமான பொருள்களைத் தான் உண்ண வேண்டும்; நல்ல பொருள்களை உண்ணக் கூடாது என்று கருத முற்பட்டனர். இதுதான் நன்மையின் அளவுகோல்; இதுதான் பகீர்கள், யோகிகளின் அழகு என்று நினைத்தனர். ஒருவரை நல்ல உணவு உண்பதாகக் கண்டால் இவரை பெரிய சான்றோர் என்று எப்படி கூற முடியும்? என்றனர். ஏனெனில் ஒரு பெரியவராக இருந்து கொண்டு சிறந்த உணவுகளை அவர் உண்பதைக் கற்பனை கூட செய்ய முடியாது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறுகிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் மஸ்ஜித் அக்ஸாவில் தர்ஸ் கொடுத்து விட்டு தனது வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி)அவர்கள் வீட்டிற்குத் திரும்பியதும் அங்கிருந்த ஒரு டெபுடி சாஹிப் அன்னாரை சந்தித்தார்.

அவர் ஓய்வு பெற்றவர். அவர் ஓர் இந்து ஆவார். அவரிடம், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பிரியாணி உண்பதாகவும், பாதாம் எண்ணெய்யைப் பயன்படுத்துவதாகவும் கூறினார்கள். எப்போதும் அல்ல. எப்போது சமைக்கப்படுமோ அப்போது உண்டார்கள். பாதாமையும் எண்ணெய்யையும் பயன்படுத்தினார்கள். அந்த இந்து வீட்டின் வெளியில் அமர்ந்திருந்தார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களைப் பார்த்து கூறினார். மவ்லவி சாஹிப் ஒரு விஷயம் கேட்க வேண்டும். முதல் கலீஃபத்துல் மஸீஹ் கூறுங்கள் என்றார்கள். ஐயா, பாதாம் எண்ணெய், பிரியாணி போன்ற உணவுகளை மேன்மக்கள் உண்ணலாமா? என்று கேட்டார். எமது மார்க்கத்தில் அத்தகைய பொருள்களை உண்பது அனுமதிக்கப்பட்டதேயாகும்; எந்தத் தடையும் இல்லை என்று அன்னார் கூறினார்கள். அவர், இல்லை; நான் கேட்பதன் பொருள் என்னவென்றால் பகீர்மார்கள் அல்லாஹ்வின் தரப்பில் தம்மை சுட்டிக் காட்டுபவர்கள் இதனை உண்பது அனுமதிக்கப்பட்டதா? மேன்மக்களாக இருப்பவர்கள் சான்றோர் என்று கூறப்படுபவர்கள் இவ்வுணவுகளை உண்பது அனுமதிக்கப்பட்டதா? ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், எம் மார்க்கத்தில் பகீர்மார்கள், பீர்மார்கள், மேன்மக்களாகக் கூறப்படுபவர்கள் அனைவருக்குமே அனுமதிக்கப்பட்டதுதான் என்றார்கள். அப்படியா ஐயா என்று கேட்டு விட்டு அந்த இந்து அமைதியாகி விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! இம்மனிதருக்கு இது பெரும் ஆட்சேபனையாகத் தெரிந்தது. ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் மஸீஹ் மஹ்தியாக எவ்வாறு இருக்க முடியும்? அதுவும் பிரியாணி மற்றும் பாதாம் எண்ணெய் போன்றவற்றை பயன்படுத்தும் நிலையில் எப்படி சாத்தியமாகும் என்பதுதான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சஹாபாக்களும் சில அஹ்மதிகள் எண்ணுவது போன்று சாதாரண விஷயமாக சுரைக்காய் பற்றி ஹதீஸ்களில் கூறியிருக்க மாட்டார்கள். இதனால் எவ்வளவு முக்கியமான விஷயம் நமக்கு கை நழுவிப் போயிருக்கும். ஹதீஸ்களில் வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் ஜுமுஆவுக்கு வரும்போது மிக நல்ல ஜிப்பா அணிந்தவாறு பள்ளிவாயிலுக்கு வந்தார்கள். இதுபோன்ற ஜிப்பாக்கள் எல்லாம் அணியாமல் இருப்பதுதான் பகீர்மார்களின் அடையாளம், நல்லவர்களின் அடையாளம், பெரியவர்களின் அடையாளம் என்று கூறக்கூடியவர் தோன்றி இருந்தால் அவருக்கு நாம் இந்த ஹதீஸ்களை சான்றாகக் காட்டி, ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளில் மிகவும் அக்கறையுடன் தூய்மை செய்வார்கள். மிக உயர்ந்த சிறந்த ஆடையை உடுத்தினார்கள். இன்னும் சொல்வதாயின், அன்னார் தூய்மைக்கு எவ்வளவு முக்கியத்துவம் தந்து பேணி வந்தார்கள் என்றால் சில சூஃபிமார்கள், ஷாஹ் வலியுல்லாஹ் சாஹிப் முஹத்தஸ் போன்றவர்கள் ஒவ்வொரு நாளும் புதிய ஜோடி உடைகளை அணிந்தார்கள். துவைத்ததையும் முற்றிலும் புதியதாகவும் அணிவார்கள்.

ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இயல்பில் மிகவும் எளிமை காணப்பட்டது. நிறைய விஷயங்களை கவனத்தில் எடுப்பதில்லை. பணியும் அதிகமாக இருந்தது. எனவே சில நாட்களில் ஜுமுஆ நாளில் ஆடைகளை மாற்றுவதையும் குளிப்பதையும் மறந்து விடுவார்கள். தாம் அணிந்திருக்கும் ஆடையுடனேயே ஜுமுஆ தொழுகைக்குப் போய் விடுவார்கள். இது ஓர் எளிமை தான். அது இல்லாமல் பகீர்களின் ஆடையில் இருக்க வேண்டும் அல்லது பெரியவர்களாகக் காட்டிக் கொள்வதற்கு ஆடைகளை மாற்றாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்திலோ அல்ல. மாறாக வேலைப்பளுவின் காரணமாக அவர்களுக்கு அந்த எண்ணம் வருவதில்லை.

ஆனால், இக்காலத்தில் நமது காலத்தின் புனிதத்தன்மைக்கு (சூபிசம்) மனிதன் அழுக்காக இருக்க வேண்டும். அதுவே தனக்கு ஓர் மதிப்பு என்றாக்கிக் கொள்ள வேண்டும் என்று அர்த்தம் செய்யப்பட்டு விட்டால் ஒருவர் எவ்வளவு அழுக்காக இருப்பாரோ அந்த அளவுக்கு அவர் இறைவனுடைய அடிமையாக இருப்பார் என்று கருதப்படுகிறது. ஆனால் மனிதன் எவ்வளவு அழுக்காக இருப்பானோ அந்த அளவுக்கு இறைவனை விட்டும் தூரமாகி விடுகின்றான். எனவே, நமது ஷரீஅத் பல்வேறு சந்தர்ப்பங்களில் குளிப்பதை கடமையாக்கி இருக்கிறது. நறுமணம் பூசுமாறு வழிகாட்டுகிறது. துர்நாற்றம் வீசும் பொருள்களை உண்டு விட்டு சபைகளுக்கு வருவதைத் தடுத்துள்ளது. அவ்வாறு பள்ளிவாயிலுக்கு வருவதும் தடுக்கப்பட்டுள்ளது. சுருக்கமாக, ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையிலிருந்து உலகம் பயன் பெற்றுக் கொண்டே சென்றது. இனியும் பயனடைந்து கொண்டே செல்லும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நிலைமைகளிலிருந்தும் உலகம் பயனடைந்து கொண்டே செல்லும். அவற்றை ஒன்றுதிரட்டுவது நமது கடமையாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஓர் இளைஞர் என்னிடம் கூறினார். நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சஹாபி ஆவேன். எனக்கு ஒரு விஷயம் தவிர வேறு எதுவும் நினைவில் இல்லை. ஒருநாள் நான் சிறுவனாக இருந்தேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய கையைப் பிடித்தேன். கை குலுக்கினேன். சிறிது நேரம் வரை எனது கைகளால் அவர்களது கையைப் பற்றியவாறு சிறிது தூரம் வரை ஒன்றாக சென்றேன். சிறிது நேரத்திற்குப் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது கையை விடுவித்துக் கொண்டு வேறு பணியில் மூழ்கி விட்டார்கள்.

வெளிப்படையாகப் பார்க்கும்போது இது ஒரு சிறிய விஷயம் தான். ஆனால், பிற்காலத்தில் இந்த சின்ன விஷயத்திலிருந்து பெரும் பெரும் முடிவுகள் எடுக்கப்படும். உதாரணமாக, இந்த சம்பவத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். இதிலிருந்து சிறுவர்களையும் கூட பெரியவர்களின் சபைக்கு அழைத்து வர வேண்டும் என்பது நிரூபணமாகிறது. இந்த வகையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலத்தில் கூட மக்கள் அன்னாரின் சபைக்கு சிறுவர்களை அழைத்து வந்தார்கள். ஒருவேளை வருங்காலத்தில் சிறுவர்களை பெரியவர்களின் சபைக்கு அழைத்து வருவதில் என்ன பயன்? அந்த சபைகளில் பெரியவர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும் என்று கூறக்கூடியவர்கள் வரலாம். ஏனெனில் தத்துவ விளக்கங்கள் வரும்போது இதுபோன்று பல கருத்துகள் வரலாம். குழந்தைகள் அங்கு வந்து என்ன செய்யப் போகிறார்கள் என்று கூறத் தொடங்கலாம். ஆகவே, இதுபோன்று கருத்துக்கள் உருவானால் அவர்களின் அக்கருத்தை இந்த அறிவிப்பு தவறாக்கி விடும். பிறகு மேலும் அக்கருத்துக்கு வலுசேர்க்கும் ஆதரவான கருத்துகள் இவ்வாறு உருவாகும். ஹதீஸ்களில் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய சபைகளிலும் கூட சஹாபாக்கள் தமது சிறுவர்களை அழைத்து வந்தார்கள். அதுபோன்று இந்த

அறிவிப்பிலிருந்து இன்னொன்றும் வெளிப்படுகிறது. ஒரு பணி வந்து விட்டால் தமது கையை விடுவித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஒரு சிறுவன் தமது கையைப் பற்றிப் பிடித்தபோது சிறிது நேரம் பற்றியவாறு வைத்திருந்து விட்டு பிறகு விடுவித்துக் கொண்டார்கள் என்பது இன்று சாதாரண விஷயமாகத் தெரியும்.

அஹ்மதிய்யா மார்க்க சட்ட விளக்கங்கள், அஹ்மதிய்ய தஸவ்வுஃப், அஹ்மதிய்ய தத்துவம் ஆகியவை உருவாகும்போது இன்று சாதாரணமாகத் தெரிகிற விஷயங்கள் பெரிய ஆதாரங்களாக போற்றப்படும். இன்றும் கூட அதன் தேவை உணரப்படுகிறது. பெரும் பெரும் தத்துவ ஞானிகள் இந்த சம்பவங்களைப் படிக்கும்போது வியப்பில் மெய்சிலிர்த்து விடுவர். இந்த அறிவிப்பை எடுத்துரைத்தவருக்கு இறைவன் நற்கூலி வழங்குவானாக! என்று கூறுவர். பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கிற அறிவிப்புகள் முன்வைக்கப்படும்போது ஞானமுடையோர் சுற்றுமுற்றும் பார்ப்பதற்குப் பதிலாக இந்த அறிவிப்பை தந்தவருக்காக துஆ செய்வார்கள்.

ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் ஒருமுறை ஸஜ்தாவில் சென்றபோது, அப்போது சிறுவராக இருந்த ஹஸ்ரத் ஹஸன் (ரலி) அவர்கள் அவர்களது கழுத்தில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். அவர் தானே எழுந்து போகும் வரை ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் தலையை உயர்த்தவில்லை. எவராவது ஒருவர் இத்தகைய வேலை செய்தால் சிலர் அதனை மார்க்கமற்ற செயல். இவருக்கு இறைவனை தொழுவதில் கவனமில்லை. தமது குழந்தையைப் பற்றிய கவனம் தான் இருந்தது என்று கூறி விடுவார். அத்தகைய மனிதர் இந்த ஹதீஸைப் படிக்கும்போது அமைதியாகி விடுவார். ஏனெனில் நபி (ஸல்) அவர்களுடைய உதாரணம் முன்னால் இருக்கிறது.

இவையெல்லாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சின்னச்சிறு விஷயங்கள் தாம் என்பது தெரிய வரும். எனினும் எவ்வளவு சிறிய செய்தியாக இருப்பினும் கூற வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நடந்து சென்றவாறு ஒரு புல்வெளியில் அமர்ந்தார்கள் என்பது போன்ற செய்தியாகவே இருந்தாலும் சரியே! ஏனெனில் இந்த செய்தியிலிருந்து கூட மிக முக்கியமான தீர்வு பின்னாளில் எடுக்கப்படலாம்.

அமர்வதற்கு வாய்ப்பு கிடைத்திருந்தாலோ அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் அது சிறியதாயினும் பெரியதாயினும் எழுதி பாதுகாக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அணியும் விதம் குறித்து நினைவில் இருந்தால் அதனை எழுதி அனுப்பலாம். இதனை அன்னார் அக்காலத்தில் கூறினார்கள். பிறகு சஹாபாக்கள் அறிவிப்புகளை தொகுக்கத் தொடங்கினார்கள். சஹாபாக்களின் பல சம்பவங்களைக் கொண்ட பதிவேடுகள் உருவாயின. இதனை நான் ஒருமுறை விவரித்தும் உள்ளேன். எவ்வாறிருப்பினும், அந்த அறிவிப்புகள் தொகுக்கப்படுகின்றன. இன்ஷா அல்லாஹ் ஏதாவது ஒரு காலத்தில் ஜமாஅத்தின் முன் எடுத்து வைக்கப்படும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த அறிவிப்புகளினால் ஒரு பயன் என்னவென்றால், வருங்காலத்தில் ஒரு சிலர் தோன்றலாம். தலையைத் திறந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என்று கூறலாம். உதாரணமாக, இரு ஒரு சின்ன விஷயம் அவர்களின் அந்த எண்ணங்களுக்கு ஒரு தீர்வாக இருக்கும். ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்கள் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. தலையைத் திறந்து கொண்டு இருத்தல் ஒரு சாதாரண விஷயம் தான். சிலர் தலையைத் திறந்த நிலையில் தொழவும் செய்கிறார்கள். அத்தகையவர்களுக்கு இந்த அறிவிப்பால் கவனம் ஏற்படும். இதுபோன்ற பல அறிவிப்புகள் அதாவது, மஸ்ஜிதில் பேண வேண்டியவை; தொழுகையில் பேண வேண்டியவை; பெரிய சபைகளின் ஒழுக்கங்கள் பற்றிய குறிப்புகள் அதில் இருக்கின்றன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களும் இருக்கின்றன என்பதில் சந்தேகமே இல்லை. அன்னார் தான் ஷரீஅத்தைக் கொண்டு வந்த நபியாவார்கள். ஆனால் சமீபத்தில் இறைவனால் நியமிக்கப்பட்டவருடைய செய்திகள் ஷரீஅத் உடைய நபியின் செய்திகளை உண்மைப்படுத்துபவையாக கருதப்படுகின்றன. அவற்றை மெய்ப்பிக்கின்றன. இக்காலத்தில் மார்க்க சட்ட விளக்கங்களில் இமாம் அபூ ஹனீபா எதனை செயல்படுத்தினார்களோ அவை மிகவும் நம்பத்தகுந்தவை என்று கூறப்படுகின்றன. அதுபோன்று வருங்காலத்தில் ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களில் எவ்வறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது செயல் மூலம் மெய்ப்பித்துக் காட்டினார்களோ அதனையே மக்கள் சரியான ஹதீஸ் என்று கருதுவர். எந்த ஹதீஸை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இட்டுக்கட்டப்பட்டவை என்று கூறினார்களோ – நம்பத்தகாதவை என்றார்களோ அந்த ஹதீஸ்களை மக்கள் பொய் என்று கருதுவர். எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய நடைமுறைகளும் ஹதீஸ்களைப் போன்றே முக்கியமானவையாகும். ஏனெனில் அவைதான் ஹதீஸ்களை உண்மையானவையா? பொய்யானவையா? என்று அறிவதற்கு ஓர் உரைகல்லாக இருக்கும்.

தொடர்ந்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இமாம் புகாரிக்கு உலகில் எவ்வளவு பெரும் கண்ணியம் உள்ளது. அந்த கண்ணியத்திற்குக் காரணம் பிறரது அறிவிப்புகளை தொகுத்தார்கள். எனவே, சஹாபாக்களின் சந்ததிகளிடமிருந்து அறிவிப்புகள் இருக்கிறது எனில் அதனை மேலும் கொண்டு செல்ல வேண்டும். மற்ற அறிவிப்புகள் மூலம் இவற்றின் நம்பகத்தன்மை நிரூபிக்கப்பட்டது எனில் பிறகு அதனை இதில் சேர்த்துக் கொள்ள வேண்டும். சில அறிவிப்புகள் முழுமையான பதிவேட்டில் வராமலும் சஹாபாக்களின் குடும்பத்தில் மட்டும் பேசப்பட்டு வருவதாகவும் இருக்கலாம். அதனை எழுதி அனுப்பலாம்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலிருந்தும் அறிவிப்பூர்வமான அம்சத்தை எடுத்துள்ளார்கள். அவை நமக்கு மிகவும் அவசியமானதாகும். செயல் பயிற்சிக்கும் அவை அவசியமானதாகும். தர்பிய்யத் ரீதியிலான பல அம்சங்கள் அதிலிருந்து வெளி வருகின்றன. திருக்குர்ஆனின் வசனத்திற்கு விளக்கம் கிடைக்கிறது. ஹதீஸ்களுக்கு விளக்கம் கிடைக்கிறது. அதிலிருந்து நமக்கு பயன் கிடைக்கிறது. எந்த அஹ்மதியாவது எதன் மூலம் அவற்றைக் கேட்டாலும் பயனடைவார். நிச்சயமாக அதனை தொகுத்தவருக்காக துஆவும் செய்வார். எனவே இது மிகவும் முக்கியமான விஷயமாகும். சில வேளைகளில் மனிதன்

அதில் முழுமையாக கவனம் செலுத்துவதில்லை. அதில் இன்றும் கூட கேள்வி எழுப்பக்கூடிய சிலரின் கேள்விக்கு பதில் உள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே இஸ்லாத்தின் முன்னேற்றம் குறித்து ஒரு துடிப்பு இருந்தது. முஸ்லிம்கள் தத்தமது நிலைமைகளை சரியாக்க வேண்டும் என்று விரும்பினர். செயல் நிலையைச் சரியாக்க எல்லாவற்றிற்கும் முதலில் அல்லாஹ்வை வணங்குவதன் பக்கம் கவனம் செலுத்துவதாகும் – தொழுவதாகும். எனவே, காதியானில் வாழ்ந்த முஸ்லிம்களிடம் பள்ளிவாயிலுக்கு வந்து தொழுமாறு அழைப்பு விடுத்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், அஹ்மதிய்யா ஜமாஅத்தை உருவாக்குவதற்கு முன் மக்களின் நிலைமைகளைப் பார்த்து, மக்கள் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்தவில்லையே என்பதைக் கண்டு தாமே ஆட்களை அனுப்பி மக்களை பள்ளிவாயிலுக்கு அழைத்து வரச் செய்தார்கள். மக்கள் காரணங்களைச் சொல்லத் தொடங்கினார்கள். ஏனெனில் பெரும்பாலார் கூலி வேலை செய்யும் ஏழைகளாக இருந்தனர். தொழுவது பணக்காரர்களின் பணி; எங்களுடையதல்ல. ஏழைகளான நாங்கள் வேலை செய்வதா? அல்லது ஐந்து வேளை தொழுது கொண்டிருப்பதா? அல்லது வேலை இல்லாமல் பட்டினி கிடப்பதா? என்றனர். உடனே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், நீங்கள் தொழுகைக்கு வந்தால் ஒருவேளை உணவுக்கான ஏற்பாட்டினை செய்கிறேன் என்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்குப் பிறகு சில நாட்கள் உணவுக்காக மக்கள் தொழ வந்தார்கள். பிறகு சோம்பல் காட்டத் தொடங்கினார்கள். மக்ரிப் நேரத்தில் அதாவது சாப்பாடு பரிமாறப்படும் நேரத்தில் மட்டும் வரத் தொடங்கினர். இறுதியில் இந்த முறையை நிறுத்த வேண்டியதாயிற்று.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறான ஓர் ஆர்வம் இருந்தது. எதற்காக? இஸ்லாத்தின் உண்மையான தோற்றம் தெரிவதற்காக அவ்வாறு செய்தார்கள். ஆகவே இவ்விஷயத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும். தொழுகைக்கு வாருங்கள். ஜமாஅத்துடன் தொழ வாருங்கள். பள்ளிவாயில்களை நிரப்புங்கள் என்றார்கள். அல்லாஹ்வின் அருளால் உலகில் எல்லா இடத்திலும் பள்ளிவாயில்கள் உருவாகின்றன. ஆனால் அதனை நிரப்புவதில் போதிய கவனமில்லை. பல இடங்களிலிருந்து முறையீடுகள் வருகின்றன. அதுபோன்று காதியானிலும் ரப்வாவிலும் மேலும் பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளிலும் அஹ்மதிகள் அங்குள்ள பள்ளிவாயில்களை நிரப்ப வேண்டும். அதுபோன்று உலகில் பிற பகுதிகளிலுள்ள முஸ்லிம்களும் தமது பள்ளிவாயில்களை நிரப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். பிறகு இன்னொரு ஆட்சேபனைக்குப் பதில் கிடைக்கிறது. சிலர் எனக்கும் எழுதுகிறார்கள். பள்ளிவாயிலுக்கு மக்களை அழைத்து வருவதற்காக சில இடங்களில் விளையாட்டுக்காக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மாலையில் வந்து விளையாடுங்கள். இவ்வாறு விளையாட்டு ஆசை காட்டி தொழுகை நடத்தப்படுகிறது என்கிறார்கள். அதனால் ஒன்றுமில்லை. அதுபோன்று சில நிகழ்ச்சிகளில் உணவுக்காக ஏற்பாடு செய்யப்படுகிறது. மக்கள் நிகழ்ச்சிக்கு வருகிறார்கள். அவர்கள் சாப்பிட வருகிறார்களா? தொழ வருகிறார்களா? என்று கேட்கப்படுகிறது. இது தப்பெண்ணமாகும். சிலர் இவ்வாறு நினைக்கிறார்கள்.

எவ்வாறிருப்பினும், பள்ளிவாயிலுடன் சேர்த்து ஓர் அரங்கு அமைக்கப்படுகிறது. அங்கு முபல்லிக்குகள், முரப்பிகள், தாமும் இளைஞராக இருக்கின்றார்கள். அல்லது விளையாட்டு வீரர்கள் விளையாடவும் இளைஞர்களை ஒன்றுபடுத்தவும் செய்தனர் எனில் எவ்வாறிருப்பினும் அதனால் பயன் கிடைக்கவே செய்கிறது. பள்ளிவாயில்களில் குறைந்தபட்சம் ஒன்றிரண்டு தொழுகைகளுக்கு இளைஞர்கள் மீது கவனம் ஏற்படுகிறது. பள்ளிவாயிலும் நிரம்புகிறது. எனவே மஸ்ஜிதுடன் சேர்த்து விளையாட்டிற்கு ஒரு ஹால் ஏன் உருவாக்கப்பட்டது? அல்லது பள்ளிவாயிலுக்கு மக்களை அழைத்து வருவதற்காக, நிகழ்ச்சிகளுக்கு அழைத்து வருவதற்காக சாப்பாடு ஏன் ஏற்பாடு செய்யப்படுகிறது? இதுவெல்லாம் குற்றமாகும் என்று தவறான ஆட்சேபனை செய்யப்படுகிறது. இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய செயல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு செய்யலாம்; எந்தத் தவறும் இல்லை.

இப்போது தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இரண்டு ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைத்தார்கள். முதலாவது ஜனாஸா கானாவைச் சேர்ந்த அல்ஹாஜ் யாகூப் பாகன் சாஹிப் ஆவார். 30 ஆகஸ்டு 2015 அன்று மரணமடைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

இரண்டாவது ஜனாஸா அஹ்மதிய்யத்தின் நீண்ட காலத் தொண்டர் முகர்ரம் ஃபஸ்ல் இலாஹி சாஹிப். இவரது ஜனாஸா ஏதோ ஒரு காரணத்தால் தொழ முடியாமல் போய் விட்டது. அலுவலகத்தில் தவறான புரிதலின் காரணமாக நடந்து விட்டது. 3 ஆகஸ்டு 2015 –ல் தமது 97வது வயதில் வஃபாத் ஆகி விட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன்.

மவ்லவி சாஹிப் 1944 –ல் வாழ்வை அர்ப்பணித்தார். முறைப்படி 1978 –ல் ஓய்வு பெற்றார். ஆனால் 1993 வரை மீண்டும் பணியில் சேர்ந்து ஜமாஅத்தின் தொண்டராக பணியாற்றி வந்தார். அதன் பிறகு கூட இறுதி மூச்சு வரை தன்னார்வத் தொண்டர் என்ற முறையில் ஜமாஅத்திற்கு நிறைய பணிகளைச் செய்துள்ளார். குறிப்பாக பிழை திருத்தும் பணியைச் செய்துள்ளார். அல்லாஹ் இவர்களது தகுதியை உயர்த்துவானாக! அவரது சந்ததிகளுக்கும் தலைமுறையினருக்கும் கூட இவர்களது நன்மைகளை தொடர வாய்ப்பு வழங்குவானாக!

Friday Sermon delivered by Hadrath Khaleefathul Masih Alkhamis (atba)
at Baithul Futuh,London – on 18.9.2015
Tamil Translation : Moulavi. M. Nizamuddin Sb
Published By Nazarath Nashr-O-Isha'ath,Sadr Anjuman Ahmadiyya - Qadian, 143516